# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.22/2018 நாள். 31–1–2018

## தனி அலுவலர் அவர்களின் ஜனவரி 2018 மாதம் சாதாரண கூட்டப்பொருள்

31–1–2018ம் நாள் புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராட்சியில் ஜனவரி 2018 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

**பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்**

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | ஜனவரி 2018 | 0 | 1 | 6 | 9 | இல்லை | இல்லை |

**பொருள் எண். 2**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜனவரி 2018 மாதத்தின் நாட் குறிப்புகள்

**அலுவலக குறிப்பு :** கூட்டத்தில் பதிவு செய்யலாம்

**பொருள் எண். 3**

அனகாபுத்தூர் நகராட்சியின் பொறியியல் பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் பொது பிரிவில் 2018-2019ம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும், செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 9 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 |
| 2 | வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி | 9.90 |
| 3 | அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள், இரசீது புத்தகங்கள், கணிணி பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் அச்சடித்து வழங்குதல். | 9.90 |
| 4 | பொது சுகாதார மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள குப்பை லாரி மற்றும் ஈப்பு வாகனம் இயக்க ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர் 5 நபர்கள் சப்ளை செய்தல் | 7.50 |

| | | |
|---|---|---|
| 5 | பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள மண்வாரி இயந்திரம் இயக்க ஒப்பந்த அடிப்படையில் 1 ஓட்டுநர் மற்றும் 1 துலக்குநர் சப்ளை செய்தல் | 3.60 |
| 6 | குடிநீர் டேங்கர் லாரிக்கு ஓட்டுநர் 2 நபர் மற்றும் துலக்குநர் 2 நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை செய்தல் | 7.00 |
| 7 | பொது சுகாதார தளவாட பொருட்கள் விநியோகம் செய்தல் | 9.90 |
| 8 | பொது சுகாதார பிரிவில் 30 எண்ணிக்கை மூன்று சக்கர சைக்கிள் குப்பை வண்டி பழுது பார்த்து பராமரித்தல் பணி | 3.00 |
| 9 | தற்காலிகமாக குடிநீர் சேமிப்பு தொட்டிகள் அமைத்தல் | 7.00 |
| 10 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கை மின் மோட்டார்களை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சப்ளை செய்தல் | 9.80 |
| 11 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 13 எண்ணிக்கை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பராமரிப்பு பணி செய்தல் | 7.50 |
| 12 | நகராட்சி பகுதிகளில் உள்ள 240 எண்ணிக்கையிலான மின் மோட்டார்கள் மற்றும் கைப்பம்பினை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான ஆட்களை சப்ளை செய்தல் | 9.50 |
| 13 | அரசு பள்ளிகளின் கழிவறைகள் பராமரிப்பு பணிகள், துப்புரவு பணிகள் செய்ய பணியாளர்களை சப்ளை செய்தல் மற்றும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல் பணி | 9.90 |
| 14 | பொது சுகாதார பிரிவிற்கு டாடா ஏஸ் வாகனம் சப்ளை செய்தல் பணி | 6.00 |
| 15 | தட்டச்சு, ஜெராக்ஸ் பிரதிகள், போட்டோ மற்றும் வரைப்படம் தயாரித்தல் | 2.50 |
| 16 | நகராட்சி பகுதிகளில் உள்ள 140 எண்ணிக்கையிலான கைப்பம்பினை பழுதுபார்த்து பராமரித்திட தேவையான உதிரிபாகங்கள் சப்ளை செய்தல் | 5.00 |

<u>அலுவலகக்குறிப்பு : 1.</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.மேற்படி பணிகளுக்கான செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 4</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் கொசு ஒழிப்பு பணிக்காக 41 கொசு ஒழிப்பு களப்பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் வீடு தோறும் சென்று பணி விவரம் குறித்த கையேடுகள், பணியாளர்களின் வருகையினை குறிக்கும் துண்டு ஸ்டிக்கர்கள் மற்றும் நோட்டீஸ்கள் முதலானவை தனியாரிடம் ஒப்பந்தப்புள்ளி கோரி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான தோராய மதிப்பு ரூ.1.60 இலட்சம் ஆகும்.

அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 5</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் வகை குப்பைகள் மற்றும் மக்காத வகை குப்பைகள் என தரம் பிரித்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள பசுமை உரக்குடிலில் உரம் தயார் செய்யும் திட்டத்தினை 100 சதவீதம் வெற்றிகரமாக செயல்படுத்திட 18 வார்டுகளிலும்

முதல் நிலை குப்பைகள் சேகரிக்கும் 31 மூன்று சக்கர வாகனத்தில் மக்கும் வகை குப்பைகள் சேகரிக்க பச்சை கலர் தொட்டி 80 லிட்டர் கொள்ளளவு கொண்டது மற்றும் மக்காத வகை குப்பைகள் சேகரிக்க நீலநிற தொட்டிகள் என தனித்தனியாக ஒரு வண்டிக்கு 4 தொட்டிகள் வீதம் 31 வண்டிகளுக்கு 124 தொட்டிகள் தேவையுள்ளது. இரண்டாம் நிலை குப்பைகள் சேகரிக்கும் 5 டிராக்டர்கள் மற்றும் ஒரு ஈச்சர் லாரியில் பிரிக்கப்பட்டுள்ள மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியே சேகரிக்க 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் 70 எண்ணிக்கை வாங்கப்பட்டு திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த வேண்டிள்ளதால் பொதுமக்களுக்கு விழிப்பணர்வு ஏற்படுத்தவும் குப்பைகளை தனித்தனியாக தரம் பிரித்து வழங்க ஏதுவாக வீட்டிற்கு 2 பிளாஸ்டிக் சாக்கு பைகள் வீதம் தேவைப்படுகிறது. மேற்படி பிளாஸ்டிக் சாக்கு பைகளை ஒப்பந்தப்புள்ளி கோரி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான தோராய மதிப்பு ரூ.3.80 இலட்சம் ஆகும்.

அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 6</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் வகை குப்பைகள் மற்றும் மக்காத வகை குப்பைகள் என தரம் பிரித்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள பசுமை உரக்குடிலில் உரம் தயார் செய்யும் திட்டத்தினை 100 சதவீதம் வெற்றிகரமாக செயல்படுத்திட 18 வார்டுகளிலும் முதல் நிலை குப்பைகள் சேகரிக்கும் 31 மூன்று சக்கர வாகனத்தில் மக்கும் வகை குப்பைகள் சேகரிக்க பச்சை கலர் தொட்டி 80 லிட்டர் கொள்ளளவு கொண்டது மற்றும் மக்காத வகை குப்பைகள் சேகரிக்க நீலநிற தொட்டிகள் என தனித்தனியாக ஒரு வண்டிக்கு 4 தொட்டிகள் வீதம் 31 வண்டிகளுக்கு 124 தொட்டிகள் தேவையுள்ளது. இரண்டாம் நிலை குப்பைகள் சேகரிக்கும் 5 டிராக்டர்கள் மற்றும் ஒரு ஈச்சர் லாரியில் பிரிக்கப்பட்டுள்ள மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியே சேகரிக்க 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகள் 70 எண்ணிக்கை தேவைப்படுகிறது. மேற்படி தொட்டிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான தோராய மதிப்பு ரூ.2.40 இலட்சம் ஆகும்.

அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 7</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள வாகனங்களின் பழுதுகளை அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் நீக்கம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 8</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள பெரிய புகை போக்கி இயந்திரத்தின் பழுதுகளை நீக்கம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு : பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 9</u>**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள UPS இயந்திரத்திற்கு 10 எண்கள் பேட்டரி பயன்படுத்தப்பட்டு வருகிறது. பேட்டரி வாங்கபட்டு 4 வருடங்கள் ஆகிவிட்டதால், பேட்டரி பழுதுகள் ஏற்பட்டு உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. புதியதாக பேட்டரி வாங்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண். 10</u>**

இந்நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு 2018–2019ம் ஆண்டிற்கு சாலை வரிகள் மற்றும் காப்பீட்டு தொகை செலுத்த வேண்டியுள்ளதால் அதற்கான தோராய செலவினம் ரூ.300000/-த்திற்கு நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.150 / 2016 / எச்1)

**<u>பொருள் எண். 11</u>**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான மீன் மார்க்கெட் மற்றும் இறைச்சி கடை நடத்தப்பட்டு வருகிறது. அவை 04.01.2015 முதல் 31.12.2017 வரை குத்தகை முடிந்து விட்டபடியால், ஏற்கனவே உள்ள குத்தகைதாரர்கள் 1 முதல் 16 வரை உள்ள குத்தகைதாரர்கள் மீண்டும் தனக்கே வழங்க கோரி மனு செய்துள்ளனர். எனவே கீழ்க்காணும் குத்தகைதாரர்களுக்கு மீண்டும் 01.01.2018 முதல் 31.12.2020 வரை மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து வழங்கவும், குத்தகைதாரர்களுக்கு குத்தகை தொகையில் வருடந்தோறும் 5 சதவிகிதம் குத்தகை தொகை உயர்வு செய்யவும், உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **குத்தகைதாரர் பெயர்** |
|---|---|
| 1. | ஏ.தாண்டவமூர்த்தி |
| 2. | ஏ.விஜயா |
| 3. | பி.எலிசபெத் ராணி |

4. டி.ஜெபமாலை
5. அக்பர் பாஷா
6. எஸ்.காஜா மொய்தீன்
7. எஸ்.ஜாபர் அலி
8. ஜி.ஷாஜான்
9. கொஸ் காஷா
10. எ.சாந்தகுமார்
11. அ.ஜான்சன்
12. தாட்சாயணி
13. எ.அசாருதீன்
14. எ.ஆதம் பாஷா
15. கிருஷ்ணன்
16. அமுல்ராணி

**அலுவலகக்குறிப்பு : 1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியமைக்கு கூட்டம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண். 12**

இந்நகராட்சி 18 வார்டு பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகளுக்கான Dengue Breeding Checkers என்ற கொசு ஒழிப்பு பணியாளர்கள் 41 நபர்கள் பேன்ஸி ஏஜன்சி நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்டு வந்தது. இப்பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 11/2017 மாதத்தில் செலவிடப்பட்டது. மேலும், நகராட்சி பகுதிகளில் டெங்கு தடுப்பு மற்றும் கொசு ஒழிப்பு பணியினை தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ள மாண்புமிகு சுகாாரத் துறை அமைச்சர் அவர்களும், அரசு செயலாளர் அவர்களும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களும் பல்வேறு ஆய்வுக் கூட்டங்கள் வாயிலாக அறிவுரைகள் வழங்கி உள்ளனர். எனவே, டிசம்பர் 2017 மாதத்தில் பணி மேற்கொண்டமைக்கு மேற்படி பேன்ஸி ஏஜன்சி நிறுவனத்தாருக்கு பில் தொகை வழங்கவும், மேலும் ஜனவரி 2017 முதல் மார்ச் 2017 மாதங்களுக்கும் தொடர்ந்து கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.9.90 இலட்சம் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.150 / 2016 / எச்1)

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி